www.Padasalai.Net www.CBSEtips.in

முதல் இடைத் தேர்வு - 2023

வகுப்பு : 9 Dharmapuri தமிழ் பதிவு எண் :

காலம் : 1.30 மணி மொத்த மதிப்பெண்கள் : 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x1=7

1. தமிழ் விடு தூது ..... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு .....
   அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3. "மிசை" என்பதன் எதிர்ச்சொல் என்ன ?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4. மல்லல் மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன ?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

5. பொருந்தாத இணை எது ?
   அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

6. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் .....
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

7. தீரா இடும்பை தருவது எது ?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

II. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (12வது வினா கட்டாய வினா) 3x2=6

8. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.
   அ) நாங்கள் பேசும்மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.
   ஆ) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் ராபர்ட் கால்டுவெல்.

9. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'– குறிப்புத் தருக.

10. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது ?

11. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

12. 'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 3x2=6

13. கலைச்சொல் தருக.
   அ) Water Management ஆ) Comparative Grammar

14. பகுபத உறுப்பிலக்கணம் தருக.
   கொடுத்தோர்

15. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.
   அ) சித்திரமும் கைப்பழக்கம் .....
   ஆ) கற்றோர்க்குச் சென்ற .....

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

16. அகராதியில் காண்க
அ) செம்மல்
ஆ) கைச்சாத்து

17. சொல்லுக்குள் சொல் தேடுக. (இரண்டு சொற்கள்)
அ) ஆற்றங்கரையோரம் ஆ) தமிழ்விடு தூது

IV. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (20வது வினா கட்டாய வினா) 2x3=6

18. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை ?

19. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது ?

20. 'நீர் இன்று அமையா' – எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

V. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2x3=6

21. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

22. உவமையணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

23. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாந் தலை.
– இக்குறளில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

VI. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x4=12

24. உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

25. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

26. என் பொறுப்புகள் . . . ,
அ) தண்ணிரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.
ஆ) .....
இ) .....
ஈ) .....
உ) .....

27. மொழி பெயர்த்து எழுதுக.
அ) Every flower is a soul blossoming in nature - Gerard De Nerval.
ஆ) Sunset is still my favourite colour, and rainbow is second. - Mattie stepanek.

VII. விரிவான விடையளிக்கவும். 1x7=7

28. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com